**கெஸ்பாவ நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 06 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கெஸ்பாவ நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 433,514 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்பட்ட ரூபா 24,760,013 தொகையான கடன் மீதி நடைமுறைப் பொறுப்பாக கணக்கு வைக்கப்படாது நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 633,198 தொகை அதிகரித்தும், நிலையான வைப்பு வட்டி ரூபா 877,539 தொகை குறைத்தும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,728,410 பெறுமதியான கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் என்பன தளபாடமும் பொருத்திகளும் கீழ் கணக்கு வைக்கப்பட்டமையினால் தளபாடமும் பொருத்திகளும் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2017 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பெறவேண்டிய நிலுவை வருமான மீதியான ரூபா 1,490,777 தொகை நிதிக்கூற்றுக்களில் வருமானக் கடன்பட்டோரின் கீழ் கணக்கு வைக்கப்படாமல் நானாவித கடன்பட்டோரின் கீழ் கணக்கு காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

வெளித்தரப்பினரால் நகர சபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள 11 வழக்குகள் மற்றும் சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள 01 வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகள் / அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 12,986,213 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாகனத் தரிப்பிடத்தை வாடகைக்கு வழங்கியதால் அறவிட வேண்டிய ரூபா 285,957 தொகையிலிருந்தும் களியாட்ட வரி ரூபா 298,497 இலிருந்தும் மீளாய்வாண்டின் போது எந்தத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் பொது வசதிகள் நிலையத்திலிருந்து ரூபா 68,790 தொகை அறவிட வேண்டியிருந்தது.

(iii) 2009 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீதி விளக்கு உதவி ரூபா 481,578 தொகை மற்றும் 2014, 2015 ஆம் ஆண்டுகளுக்குரியதாக தயாரிக்கப்பட்ட விளையாட்டுச் சங்கத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 111,054 தொகை என்பன மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பல வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத கடன்கொடுத்தோர் மீதி ரூபா 29,717,649 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

(அ) நிலையாக வைப்புச் சான்றிதழ், சேமிப்புக் கணக்கின் பாஸ் புத்தகம், வைப்புச் சான்றிதழ், காலப்பகுப்பாய்வு மற்றும் விரிவான பட்டோலை என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 383,299,280 கூட்டுத்தொகையான 14 கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) வீதி விளக்கு தூண்கள் முறையாக இலக்கமிடப்பட்டு அது தொடர்பான விபரங்களைக் காண்பிக்கின்ற பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) நாளாந்த வேலை அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்த ரூபா 996,520 பெறுமதியான 2319 வீதி விளக்குகள், வீதி விளக்கு தூண்களில் பொருத்தப்பட்டிருந்ததா என கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | - | 2016 மே 09 ஆந் திகதி முதல் செயலாளர் பதவிக்கும் 2015 செப்தெம்பர் 16 ஆந் திகதி முதல் இலங்கை தொழில்நுட்ப சேவையின் (விசேட) பதவிக்கும் நீண்ட காலமாக பதில் கடமை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 156 | 600,000 | பொறுப்பின்றி செயற்படுகின்ற உத்தியோகத்தர்களால் அரசாங்கத்திற்கு ஏற்படும் நட்டம் மிகை விதிப்பாக அறவிட வேண்டிய போதிலும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அறிக்கை அனுப்புதல் மற்றும் பங்களிப்புப் பணம் அனுப்புவதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் மிகைக் கட்டணம் செலுத்தப்பட்டமையால் சபைக்கு ஏற்பட்ட நட்டம் உரிய பொறுப்பு வாய்ந்தவரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2) மற்றும் (5) | 497,303 | பெறப்பட்ட முற்பணம் குறித்த பணி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணிசமான காலதாமதத்துடன் தீர்க்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் ஆண்டின் திசெம்பர் 31 இற்கு முன்னர் தீர்க்கப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 16,523,466 | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (Iv) | நிதிப்பிரமாணம் 1646 | - | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | - | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களுக்காக தனிப்பட்ட பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மாநகர சபை, நகர சபைக்கான கணக்குகள் கோவை | - | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டு வரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,970,046 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 57,026,425 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரியும் வரியும் | 48,160 | 39,441 | 36,123 | 21,985 | 40,785 | 42,655 | 49,277 | 21,668 |
| வாடகை | 13,750 | 19,985 | 19,410 | 2,388 | 11,674 | 12,697 | 13,333 | 875 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,551 | 5,004 | 5,004 | - | 4,201 | 5,561 | 5,561 | - |
| ஏனைய வருமானம் | 282,965 | 284,961 | 330,555 | 232,207 | 283,764 | 287,881 | 281,708 | 282,860 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2017 ஆம் ஆண்டின் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தில் 2.73 சதவீதம் உழைக்கப்படாதிருந்ததுடன் பாதீடு செய்யப்பட்ட மூலதன வருமானத்தை விஞ்சி ரூபா 39,097,286 தொகை அதாவது 63.5 சதவீதம் கிடைத்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 21,686,826 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 50,000 இனை விஞ்சிய 03 ஆதன வரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 292,200 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ஆதனவரி ரூபா 31,535,605 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 5,617,869 தொகை அதாவது 17.81 சதவீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 20,886,247 ஆக இருந்த போதிலும், அதில் மீளாய்வாண்டின் போது ரூபா 7,125,395 தொகை அதாவது 34.11 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 13,760,852 தொகையை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

### 2.2.4 வாடகை

(அ) சபைக்குரிய 26 கடைகளிலிருந்து ரூபா 670,725 தொகையான வாடகை 2018 யூலை 12 ஆந் திகதியில் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்காக சிட்டையிடப்பட்ட வருமானமான ரூபா 12,593,160 தொகையில் 2018 யூலை 12 ஆந் திகதி வரையிலும் ரூபா 261,525 இனை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

(இ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை மீதி ரூபா 1,703,189 ஆக இருந்த போதிலும், அதில் ஆண்டின் போது எந்தத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) மீளாய்வாண்டிற்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டிய விற்பனைக் கடைகளின் எண்ணிக்கை 1094 ஆக இருந்த போதிலும், 1045 விற்பனைக்

கடைகளிலிருந்து பணம் அறவிடப்பட்டிருந்ததுடன் 605 விற்பனைக் கடைகளுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 294,075 தொகையான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணத்திலிருந்து 2018 யூலை வரையிலும் ரூபா 107,755 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 955,280 தொகையான நிலுவை வியாபார வரி மீதியிலிருந்து 2018 யூலை வரையிலும் ரூபா 707,150 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் அகற்றப்படுகின்ற மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவுப்பொருட்களை முறையாக அகற்றுவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,387,199 தொகையான 04 செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 4,291,308 தொகையான 03 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 1,903,443 தொகையான கழிவுப்பொருள் வரி நிலுவையில் மீளாய்வாண்டில் ரூபா 793,105 தொகை அதாவது 41.67 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டில் வகைப்படுத்தப்பட்ட 7,117 தொன் கழிவுப்பொருட்கள் மற்றும் 14,539 தொன் கலப்பு கழிவுப்பொருட்கள் என்பன கறதியான கழிவுப்பொருள் தளத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் கழிவுப் பொருட்களை சேகரித்தல் சரியான முறையில் முகாமை செய்யாமையினால் கலப்பு கழிவுப்பொருட்களுக்காக ரூபா 10,904,250 தொகை மேலதிகமாகச் சபைக்குச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(iii) கெஸ்பாவ நகர சபை உள்ளடங்கலாக 08 உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து அகற்றப்படுகின்ற கழிவுகள் கறதியான கழிவுப்பொருள் தளம் அமைந்துள்ள காணியில் 80 சதவீதமான நில அளவு கெஸ்பாவ நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குரியதாகையால் சபை அதிகாரப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கு

எதிர்காலத்தில் சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படும் ஆபத்தான நிலைமையொன்று காணப்பட்டது.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு உரிய கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான பழைய விருந்தினர் விடுதியை உடைத்து அகற்றி ரூபா 52,929,240 தொகையான மதிப்பீட்டின் கீழ் புதிய கட்டிடமொன்றின் முதலாவது கட்டம் நிர்மாணிக்கப்பட்டு 2014 திசெம்பர் 04 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் விருந்தினர் விடுதியிலிருந்து 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 6,000,000 வருமானமொன்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் எந்தவொரு வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறு

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடம் |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 04 | 02 | 02 |
| மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| இரண்டாம் நிலை | 61 | 60 | 01 |
| ஆரம்ப நிலை | 184 | 174 | 10 |
| மொத்தம் | 251 | 237 | 14 |

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 14 வெற்றிடங்களை நிரப்புவதற்கு சபை தவறியிருந்தது.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்த 48 ஊழியர்களில் 05 ஊழியர்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் சம்பளமாக 2015 முதல் 2017 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட ரூபா 49,173,705 தொகையும் மீளளிப்புச் செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

**(அ) டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட சிவப்பு அறிவித்தல்களின் எண்ணிக்கை 479 முதல் 277 வரையிலும் நுளம்புகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களுக்காக தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 183 முதல் 118 வரை குறைவடைந்திருந்த போதிலும், சபை அதிகாரப் பிரதேசத்தில் அறிக்கையிடப்பட்டிருந்த நோயாளிகளின் எண்ணிக்கை 686 முதல் 1446 வரை 210

சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே டெங்கு மரணங்களின் எண்ணிக்கை 03 முதல் 06 வரை இரண்டு மடங்காகியிருந்தது.

**(ஆ) மயான நிலங்கள் மற்றும் சுடலைக்கூட சேவைகள்**

(i) ஹல்பிட்ட பொது மயான நிலத்தின் அளத்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு, நில வரைபடத் திட்டம் தயாரிப்பதற்கும், 13 மயான நிலங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வேலியொன்று அல்லது மதிலொன்றை நிர்மாணிப்பதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 03 மயான நிலங்களின் ஆரம்ப அளவிடையை ஒப்பீடு செய்யும் போது நிலத்தின் அளவு 37.92 பேர்ச் வேறுபாடொன்று காணப்பட்டதுடன் பாதுகாப்பு மதிலொன்று இல்லாமையினால் மயான நிலத்திற்குரிய நிலத்தின் அளவை குறிப்பாக இனங்காண முடியாதிருந்தது.

(iii) 2015 திசெம்பர் 28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் சுடலைக் கூடம் தொடர்பான உப விதியின் 06 ஆவது பிரிவின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட்டதன் பின்னர் சுடலைக்கூட பொறுப்பாளருக்கு மனித உடல் கையளிக்கப்பட வேண்டிய நேரத்தை உள்ளடக்கி அனுமதிப்பத்திரமொன்று விண்ணப்பதாரருக்கு விநியோகிக்கப்படாதிருந்ததுடன் 10 ஆவது பிரிவின் பிரகாரம் சுடலைக் கூட பொறுப்பாளரால் தேவையான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) முன்பள்ளிப் பாடசாலைகளின் செயலாற்றல்**

(i) 2013 செப்தெம்பர் 04 ஆந் திகதிய 1826/23 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட மேல் மாகாண சபையின் 2013 இன் 01 ஆம் இலக்க முன்பள்ளிப் பாடசாலை விதப்புரையின் 13 ஆவது பிரிவின் பிரகாரம் மாகாணத்தின் சகல முன்பள்ளிப் பாடசாலைகளும் இதன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ஒரு முன்பள்ளி பாடசாலைகள் அவ்வாறு பதிவுசெய்யப்படாதிருந்ததுடன் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள 04 ஆசிரியர்களைப் பதிவு செய்து அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 04 முன்பள்ளி பாடசாலைகளின் மாணவர்களின் எண்ணிக்கை 80 முதல் 60 வரை குறைவடைந்திருந்ததுடன் ஆசிரியர்களின் எண்ணிக்கை 04 முதல் 08 வரை இரண்டு மடங்காகியிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

(அ) கெஸ்பாவ நகர சபைக்குரிய 25 ஏக்கர் 38.75 பேர்ச் அளவான 14 மயான நிலங்களின் உரித்து (உரிமை) சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளி நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 02 டபள் கப் வாகனங்களும் கைடெக்ரர் ஒன்றும் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் ரூபா 2,256,000 கிரயமான 04 வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 2012 பெப்ரவரி 06 ஆந் திகதி இடர் முகாமைத்துவ அமைச்சின் மூலம் கையளிக்கப்பட்ட அதிக இயலளவை உடைய கொங்கிறீட் கலவை இயந்திரம் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**3.5.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

2017 ஆம் ஆண்டில் 120,049,607 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 4,324,890 தொகையான பொதுக் களஞ்சிய இருப்புக்கள் என்பவற்றுக்காக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.6 இனங்காணப்பட்ட நட்டம்**

வாசகர்களுக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 329,398 பெறுமதியான புத்தக இருப்பொன்று காணாமல் போன மற்றும் அகற்றப்பட்ட புத்தகங்களாகக் கருதி சரியான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

(அ) ஆண்டின் போது வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே நிதிஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதீடு செய்யப்பட்ட வருமானங்களிலும் செலவினங்களிலும் 2.16 சதவீதம் முதல் 893.19 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்ட 15 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாகக் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவினம் 5.25 சதவீதமும், பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவினம் 68.84 சதவீதமும் ஆக பாதீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 98,453,613 இனால் விஞ்சியிருந்தது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் முறையாக ஒழுங்கமைக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் | |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டமை |
| | | (ii) | கணக்குகளில் அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டமை |
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| | | (ii) | புதிய வருமான வழிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாமை. |
| (இ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) | மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்படாமை. |
| | | (ii) | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டம் நிறைவேற்றப்படாமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | வருமான மதிப்பீடு சாத்தியமானதாகத் தயாரிக்கப்படாமை. |
| | | (ii) | வருமான, செலவின விடயங்களில் கணிசமான முரண்கள் காணப்பட்டமை. |
| (உ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | நிலுவை மீதி அறவிடப்படாமை |
| | | (ii) | கடன்கொடுத்தோர் தீர்க்கப்படாமை |
| (ஊ) | உள்ளகக் கணக்காய்வு | | உள்ளகக் கணக்காய்வு பிரிவின் நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்படாமை. |
| (எ) | மனிதவள முகாமைத்துவம் | | தேவையான ஆட்சேர்ப்புக்கள் சரியான பிரகாரம் நிறைவேற்றப்படாமை. |
| (ஏ) | சொத்துக்கள் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு | (i) | சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை. |
| | | (ii) | சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | | (iii) | நிலையான சொத்துக்கள் கணக்கு வைக்கப்படாமை |
| | | (iv) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு முறையாக இன்மை |